3. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have to announce to the House that I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriaton Bill, 1975.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have to announce to the House that I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation Bill, 1975 (L.A. Bill No. 11 of 1975), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

(பிற்பகல் 3-40)

4. கவன ஈர்ப்பு.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் தமிழில் தேர்வு எழுத அனுமதி கோரி கிளர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : தலைவரவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

> "சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் தமிழில் தேர்வு எழுத அனுமதிக்கும் படி கோரி கிளர்ச்சி செய்ததனால் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டில், சென்னை சட்டக் கல்லூரியில், முதல் சட்ட வகுப்பில் ஒரு பிரிவிலும், இரண்டாம் சட்ட வகுப்பில் ஒரு பிரிவிலும் சோதனை முறைத் திட்டமாக, தமிழில் பாடங்கள் நடத்தப்பட்டன. இவ் வகுப்புக்களுக்குத் தேவையான பாட நூல்கள் தமிழில் இல்லை. இதனால் மாணவர்கள் ஆங்கில மொழி வகுப்புகளுக்கும் வந்து தேர்வுகளை ஆங்கிலத்திலேயே